ஜனவரி 2014 நாடு பற்றிய சுருக்கம்

# இலங்கை

2009 இல் முடிவடைந்த, சுமார் மூன்று தசாப்த கால நீண்ட உள்நாட்டு யுத்தத்தின் போது புரியப்பட்ட பாரதூமான மனித உரிமைத் துஷ்பிரயோகங்களுக்கான கவனம் செலுத்துவதில் இலங்கை அரசாங்கத்தின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச 2013 இல் ஒரு சிறிய முன்னேற்றத்தையே ஏற்படுத்தினார். இலங்கை, அதன் சொந்த கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் (LLRC) பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கும் மற்றும் உள்நாட்டு யுத்தத்தில் இரு தரப்புகளாலும் புரியப்பட்டதாக குற்றஞ் சாட்டப்படும் யுத்தக் குற்றங்களுக்கு பொறுப்புக் கூறுவதற்குமாக இலங்கையைப் பல வருடங்களாக அது கோரியதையும் குறிப்பிட்டு, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை (HRC), மார்ச்சில் இரண்டாவது தீர்மானத்தை நிறைவேற்றியது. க.பா.ந.ஆ இன் பரிந்துரைகளை தான் அமுல்படுத்துவதாக அரசாங்கம் தெரிவித்தது, ஆயினும் அது தெரிவிப்பதை உறுதிப்படுத்திக் கொள்வது சிரமமானதாக இருந்ததுடன் அதன் பொறுப்புக் கூறல் நம்பகத்தன்மை அற்றதாக இருந்தது.

இந்த வருடம், இந்து மற்றும் முஸ்லிம் மதத்தினருக்கு எதிராக தீவிரவாத பௌத்த குழுக்களினால் மேற்கொள்ளப்படும் தாக்குதல்களில் ஒரு அதிகரிப்பு காணப்பட்டது.

2012 இல் முக்கியமானதொரு வழக்கில் அரசாங்கத்துக்கு எதிராக தீர்மானம் மேற்கொண்ட பின்னர் பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்க அவர்களுக்கு எதிராக ராஜபக்ச அரசாங்கம் அரசியல் குற்றச்சாட்டை உருவாக்கியதன் பின்னர் நீதித்துறையின் சுயாதீனமும் கேள்விக்கு உள்ளாகியது.

செப்டெம்பரில் மூன்று மாகாணசபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்பட்டன. அச்சுறுத்தல், வன்முறை மற்றும் முறையற்ற இராணுவத் தலையீடு தொடர்பான பல சம்பவங்கள் பற்றி சுயாதீனமான கண்காணிப்பாளர்கள் அறிவித்தனர். உள்நாட்டு யுத்தத்தின் போது பெரும் பாலான மோதல்களுக்கான களமாக இருந்த தமிழ் இனத்தவர்களைப் பெரும் பான்மையாகக் கொண்ட பிரதேசமான வட மாகாணசபையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு (TNA) பாரிய பெரும்பான்மையில் வெற்றிபெற்றது.

செப்டெம்பர் அளவில், உள்நாட்டு யுத்தத்தின் இறுதியில் தோற்கடிக்கப்பட்டு, பிடித்து வைத்திருந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் (LTTE) உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் எனக் கணிப்பிடப்பட்ட 12,000 பேர்களில் 230 பேர்களை அரசாங்கம் “புனர்வாழ்வுக்காக” தடுத்து வைத்திருந்தது.

**பொறுப்புக்கூறுதல்**

யுத்தக் குற்றக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுப்பதற்கு பல வருடங்களாக இலங்கை தவறி வந்தமை, மார்ச்சில் மனித உரிமைகள் பேரவை, சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்டங்களின் மீறல்களுக்குரிய சுயாதீனமான மற்றும் நம்பத் தகுந்த புலன்விசாரணையை மேற்கொள்ளக் கோரி இலங்கை மீது ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு உந்தியது. அத்தோடு, இத் தீர்மானமானது மனித உரிமைகள் பேரவையின் செப்டெம்பர் மாத அமர்வுகளின் போது இலங்கையில் மனித உரிமைகள் நிலைமைகள் மீதானதொரு வாய்

மொழி மூலமான இற்றைப்படுத்தலை அளிப்பதற்கும், மற்றும் மார்ச் 2014 அமர்வில் ஓர் எழுத்து மூலமான அறிக்கையை சமர்ப்பிப்பதற்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர் ஆணையாளர் நவி பிள்ளை அவர்களைக் கோரியது.

மனித உரிமைகள் பேரவைத் தீர்மானத்தை அடுத்து, ஒரு சில யுத்தக் குற்றச் சாட்டுக்கள் தொடர்பான புலன் விசாரணைகள் உட்பட, க.பா.ந.ஆ இன் பரிந்துரைகளின் அமுல்படுத்தல்கள் தொடர்பாக பல இற்றைப்படுத்தல்களை அரசாங்கம் வெளியிட்டது. அதன் அறிவித்தல்கள் பலவற்றை அரசாங்கத்தின் வெளிப்படைத் தன்மையின்மை காரணமாக உறுதிப்படுத்துவது கடினமாக இருந்ததுடன், அவை உண்மையாக இருந்தாலும் கூட, முக்கியமான அம்சங்களில் தீர்மானத்தில் கோரப்பட்ட நடவடிக்கைகளுக்கு மிகவும் குறைந்த தன்மை கொண்டவையாகவே அவை காணப்பட்டன.

2012 இல் ஸ்தாபிக்கப்பட்ட விசேட இராணுவ விசாரணை நீதிமன்றங்கள் கணிசமான சாட்சியங்கள் இருந்த போதிலும் அவற்றுக்கு முரணாக, எந்தவொரு யுத்தக் குற்றச்சாட்டு சட்டங்ளில் இருந்தும் இராணுவத்தை முழுமையாக பழி விலக்கியது. ஜனவரி 2006 இல், திருகோணமலையில் ஐந்து தமிழ் இளைஞர்களின் படுகொலையின் புலன்விசாரணையின் ஒரு பகுதியாக பொலிஸ் விசேட அதிரடிப் படையின் 12 உறுப்பினர்களை அரசாங்கம் கைது செய்த வேளையில், அது சம்பந்தப்பட்ட சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்களைக் கைது செய்ய அது தவறியது. பலவந்தமான காணாமற் போதல்கள் பற்றி க.பா.ந.ஆ இன் கரிசனைகளுக்கு பதிலிறுப்பதற்கு, ஒரு மட்டுப்படுத்தப்பட்ட ஆணையுடனும் மற்றும் அதன் கண்டறிதல்களை அரசாங்கம் பகிரங்கப்படுத்துமா என்ற தெளிவின்மையோடும் அமைந்தாக, அண்மையில் ஒரு விசேட ஆணைக்குழுவை அரசாங்கம் ஸ்தாபித்தது..

உயர் ஆணையாளர், பிள்ளை அவர்கள் ஆகஸ்டில் இலங்கைக்கு விஜயம் செய்தார். மனித உரிமைகள் பேரவைக்கான அவரது செப்டெம்பர் மாதத்து வாய் மொழி மூலமான அறிக்கை, போருக்குப் பின்னதான பொறுப்புக்கூறல் தொடர்பில் அரசாங்கத்தின் தவறுதல்கள் மீதானதொரு கடுமையான விமர்சனமாக இருந்தது. யுத்தக் குற்றங்களின் “குற்றச்சாட்டுகள் மீது சுயாதீனமான மற்றும் நம்பத் தகுந்ததான புலன்விசாரணைக்கு” அரசாங்கத் தரப்பிலிருந்தான முயற்சிகளுக்கு எந்தவொரு சான்றையும் தான் காணவில்லையெனவும், அரசாங்கம் க.பா.ந.ஆ இன் பரிந்துரைகள் பலவற்றை அமுல்படுத்த தவறிவிட்டது எனவும் பிள்ளை கூறினார். க.பா.ந.ஆ இன் முக்கிய பரிந்துரைகளிலொன்றான பாதுகாப்பு அமைச்சிலிருந்து பொலிஸ் துறையை வேறாக்கும் செயற்பாடானது, முன்னாள் இராணுவ அதிகாரியின் கட்டளையின் கீழ் அது கொண்டுவரப்பட்டதன் மூலமாக இன்னமும் பூர்த்தி செய்யப்படாது உள்ளது என பிள்ளை குறிப்பிட்டார்.

## சித்திரவதை மற்றும் பாலியல் வல்லுறவு

காவலிலுள்ள ஆட்கள் பாதுகாப்பு படைகளினால் சித்திரவதை மற்றும் ஏனைய இழிவான நடத்துதல்களுக்கு உள்ளாகுதல் என்பது ஆயுத மோதலின் போதும் மற்றும் அதன் பின்னரும் காணப்பட்ட பரவலானதொரு பிரச்சினையாக இருந்தது. யுத்தம் முடிவடைந்த பின்னரும் கூட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் என சந்தேகிக்கப்பட்டவர்களுக்கு பாலியல் வல்லுறவும் மற்றும் பாலியல் வன்முறைகளும் பரவலான சித்திரவதைகளின் ஒரு முக்கிய அம்சமாக இருந்தது என்பதற்கு மனித உரிமைகள் கண்காணிப்பகம் பெப்ரெவரியில் புதிய சான்றுகளை வெளியிட்டது. த.வி.பு இயக்கத்துடனான ஈடுபாடு குறித்த “ஒப்புதல் வாக்குமூலத்தைப்”

பெற்றுக் கொள்வதற்கும் மற்றும் த.வி.பு இயக்கத்துடனான ஈடுபாட்டினை அதையரியப்படுத்துவதற்கும் ஏனைய தமிழ் மக்களிடையே அச்சத்தை ஊட்டுவதற்காகவும் என சித்திரவதைகள் பயன்படுத்தப்பட்டன.

இந்தக் கண்டறிதல்களை அரசாங்கம் நிராகரித்ததுடன், அவை தங்களின் வெளிநாட்டுத் தஞ்சக் கோரிக்கைகளுக்கு வலுவூட்டுவதற்காக தனிப்பட்டவர்களால் இட்டுக்கட்டப்பட்டவை எனவும் தெரிவித்தது. அறிவிக்கப்பட்ட பாலியல் துஷ்பிரயோகங்கள் மீது அரசாங்கத்தின் ஏதேனும் புலன்விசாரணைகள் பற்றி மனித உரிமைகள் கண்காணிப்பகம் எதுவும் அறிந்திருக்கவில்லை.

த.வி.பு உடன் தொடர்புபட்ட தமிழர்கள், மீள்திரும்புதலின் போது சித்திரவதைக்கு ஆளாகும் இடரேதுநிலையிலுள்ளனர் எனக் கண்ட பின்னர் பல ஐரோப்பிய நாடுகள் அதன் பின்னர் அவர்களைத் சொந்த நாட்டிற்கு நாடுகடத்துவதை இடைநிறுத்தியுள்ளன. ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான சர்வதேச ஸ்தானிகராலயம் (யூ.என்.எச்.சி.ஆர்) அகதிக் கோரிக்கையை மதிப்பிடுதல் மீதான அதன் வழிகாட்டல்களை டிசம்பர் 2012 இல் திருத்தியுள்ளதுடன் த.வி.பு உடன் ஏதேனும் தொடர்புகளைக் கொண்டுள்ள நபர்கள், மீள்திரும்பலின் போது இடரேதுநிலையிலுள்ளவர்களாக கருதப்படல் வேண்டுமெனவும் பரிந்துரைத்திருக்கின்றது.

**எதேச்சாதிகாரமான தடுத்து வைத்தல் மற்றும் பலவந்தமான காணாமற் போதல்கள்**

இலங்கையின் பயங்கரவாத தடைச்சட்டம் காவலிலுள்ள சந்தேகத்திற்குரிய நபர்களுக்கு எதிராக பொலிஸாருக்கு பரந்ததொரு அதிகாரத்தை அளிக்கின்றதுடன், பாதுகாப்பு சந்தேகத்திற்குரியவர்களை விசாரணைகளின்றி நீண்ட காலத்திற்கு தடுத்து வைப்பதை நியாயப்படுத்துவதற்கு அதிகாரிகளால் இச்சட்டம் மிகவும் சாதாரணமாக முன்னிடப்படுகின்றது. இது இன்னமும் தொடர்ச்சியான உபயோகத்திலுள்ளது. சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர்கள் அதே போன்று அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடங்கள் குறித்தான முழுமையான பட்டியல்களை கிடைக்கப் பெறும் வகையில் தயார் செய்யப்பட்டுள்ளதாக அரசாங்கம் உறுதிப்படுத்துகிறது, ஆனாலும் குடும்ப உறுப்பினர்கள் தகவல்களைப் பெற்றுக் கொள்வது சிரமானது என 2013இல் அறிவித்தனர். இலங்கையின் வடக்கில் பலவந்தமான காணாமற் போனவர்களின் குடும்பங்களிடம் விஜயம் செய்து அவர்களைச் சந்தித்தபோது, “இந்தளவிற்கு கட்டுப்படுத்த முடியாத துன்பத்தை தான் ஒரு போதும் கண்டதில்லை” என ஆகஸ்ட் மாதத்திலான தனது விஜயத்தின் போது பிள்ளை அவர்கள் கூறினார்.

**சிவில் சமூக ஸ்தாபனங்கள் மற்றும் ஊடக சுதந்திரம்**

சிவில் சமூக ஸ்தாபனங்கள் மற்றும் ஊடகங்கள் என்பன தொடர்ந்தும் எதேச்சாதிகாரமான கட்டுப்பாடுகள் மற்றும் அச்சுறுத்தல்களுக்கு முகங் கொடுக்கின்றன. யூனில், “பொதுமக்கள், நாட்டின் ஒழுக்கம் என்பவற்றின் எதிர்பார்ப்புக்கு எதிராக மீறுகின்ற அல்லது மக்களின் ரசனை மற்றும் ஒழுக்கத்தின் தரங்களைக் கீழ்மைப்படுத்தும் போக்குடைய” உள்ளடக்கங்கள் உட்பட, 13 வகையான உறுதிப்படுத்தப்பட்ட உரைகளை தடைசெய்யும் ஒரு ஆபத்தான ஐயத்திற்குரியதான ஊடகக் கோவையை அரசாங்கம் பிரேரித்தது. அத்தோடு இத் தடை செய்தலானது, அரசாங்கத்தை விமர்சிப்பதை தடை செய்வதாக “பொருள் கொள்ளப் படக்கூடியதாக, நிறைவேற்றுதல், நீதித்துறை மற்றும் சட்டவாக்கம் என்பவற்றின் நேர்மைத் தன்மைக்கு எதிரான விடயங்களைக் கொண்டிருக்கும்” எதேனும் உள்ளடக்கங்களைத் தடைசெய்வதாகவும் இருந்தது. உத்தேசிக்கப்பட்ட இந்தக் கோவை பலத்த எதிர் மறையான ஊடகப் பரப்புரையின் பேரில் மீளப் பெறப்பட்டது.

அரசாங்கத்தை விமர்சிக்கும் சில செய்தி இணையத்தளங்களை மக்கள் பார்வையிடுவதை அரசாங்கம் தொடர்ந்தும் தடுத்து வருகின்றது. அண்மைய வருடங்களில் கொல்லப்பட்டு அல்லது "காணாமற்போகச் செய்யப்பட்ட" ஊடகவியலாளர்களின் பல வழக்குகள் தீர்க்கப்படாது எஞ்சியுள்ளன.

குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கில் பணியாற்றும், செயற்பாட்டாளர்கள் மற்றும் ஸ்தாபனங்கள் தொடரும் தொல்லைப்படுத்தல்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் பற்றி முறையிடுகின்றனர். வடக்கு கிழக்கில் தான் சந்தித்த ஆட்கள், அவர் விஜயம் செய்த சில மணி நேரங்களிற்குள்ளாகவே பாதுகாப்பு படைகளினால் விஜயம் செய்யப்பட்டதை பிள்ளை அவர்கள் குறிப்பிட்டார். இந்த அறிக்கைகளை விசாரணை செய்வதற்குப் பதிலாக, பிள்ளை அவர்களின் குற்றச்சாட்டுக்களை அரசாங்கம் மறுத்ததுடன் அவரது அறிக்கைக்கான மூலங்களைப் பெயரிடுமாறும் கோரியது. அரசாங்கத்தினாலான அடக்குமுறை வடக்கு மற்றும் கிழக்குக்கு மட்டும் மட்டுப்படுத்தப் படவில்லை: ஆகஸ்ட் மாதத்தில் சுத்தமான குடிநீரைக் கோரி வெலிவேரியாவில் ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் மீது இராணுவம் துப்பாக்கி பிரயோகம் செய்து, மூவரைக் கொன்றது.

ஜூலையில், உள்நாட்டு யுத்தத்தின் முடிவில் யுத்தக் குற்ற குற்றச்சாட்டுகள் பற்றிதொரு ஆவணப் படமான "நோ பயர் ஸோன்" இன் தயாரிப்பாளர் கலும்மக்கிரே மீது இலங்கையின் ஒரு சிரேஷ்ட இராஜதந்திரி ஒரு பகிரங்கமான தாக்குதலை ஆரம்பித்து, மக்கிரே த.வி.பு இடமிருந்து "இரத்தத்தில் தோய்ந்த பணம்" பெற்றுக்கொண்ட ஒரு பயங்கரவாதி என செய்திகளை பரப்பினார். அரசாங்கம் அந்த இராஜதந்திரியின் கருத்துக்களை தணிக்கை செய்யவில்லை என்பதோடு, மக்கிரே உட்பட சனல் 4 இன் குழுவினர், நவெம்பரில் பொதுநலவாய மாநாட்டின் போது தொடர்ச்சியான தொல்லைப்படுத்தல்களுக்கும் ஆளாகினர்.

தீவிரவாத பௌத்த குழுவான பொது பல சேனாவினால் (B.B.S), மத ரீதியான சிறுபான்மையினருக்கு எதிராக அதிகளவில் காண்பிக்கப்படும் வன்முறைகளிலான எழுச்சி ஒரு கவலை தரும் போக்காக உள்ளது. இந்த தாக்குதல்களைத் தடுக்கவோ அல்லது புலன்விசாரணை செய்வதற்கோ அரசாங்கம் எதனையும் செய்யவில்லை. இலங்கையின் முஸ்லிம் சமூகத்தை இலக்காகக் கொண்டு பொ.ப சே இனால் முன்னெடுக்கப்பட ஒரு பிரச்சாரத்தில், பாதுகாப்பு அமைச்சின் செயலாளரான ஜனாதிபதியின் சகோதரர், ஒரு பகிரங்க வைபவத்தில் பொ.ப.சே குழுவின் அதிதியாக இருந்தார். செப்டெம்பரில் மனித உரிமைகள் பேரவைக்கான அவரது வாய் மொழி மூலமான அறிக்கையில், உயர் ஆணையாளர் பிள்ளை, மதச் சிறுபான்மையினருக்கு எதிரான உரைகளின் அதிகரித்தல் குறித்து எச்சரிக்கையை வெளிப்படுத்தியதுடன், வன்முறைகளைத் தடுப்பதற்கு மேலும் பலமான அரசாங்கத் தலையீட்டுக்கும் வேண்டிக் கொண்டார்.

**வடக்கு, கிழக்கில் இராணுவத் துஷ்பிரயோகங்கள்**

வடக்கு மற்றும் கிழக்கில் அதன் இராணுவப் பிரசன்னத்தை கணிசமான வகையில் குறைப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்ததாக கூறுகின்றது, ஆனாலும் மக்களின் சாதாரண வாழ்க்கையில் அடிக்கடி இராணுவத்தினர் இன்னமும் தலையீடு செய்வதாகவே நம்பிக்கைக்குரிய அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. பாதுகாப்பு அமைச்சு மற்றும் இராணுவ இணையத் தளங்கள் ஆகிய இரண்டும் மக்கள் விவகாரங்களில் இராணுவத்தின் வகிபாகம் பற்றி கிரமமாக கட்டுரைகளை இடுகின்றமை உள்ளூர் மக்கள் மற்றும் அபிவிருத்தி மீதான கட்டுப்பாட்டுக்கு அவை முயல்வதை நோக்காகக் கொண்டதாகக் காணப்படுகின்றது. செப்டெம்பரில் மாகாணசபைத் தேர்தல்களின் போது ஆளுங்

கட்சிக்கு சார்பாக இராணுவப் பிரச்சார நடவடிக்கைகள் குறித்தும், அதனால் தேர்தல்களுக்கு முன்னதாக தமிழ் மக்களிடையே பாதுகாப்பின்மை மற்றும் பதட்டம் என்பவற்றை ஏற்படுத்தியமை குறித்தும் சுயாதீன தேர்தல் கண்காணிப்பாளர்கள் கரிசனைகளை வெளிப்படுத்தினர்.

வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள பெண்களும் சிறுமிகளும் பாலியல் தொல்லைப் படுத்தல்கள் மற்றும் வன்முறைகளுக்கு ஆளாகும் விசேட இடரேதுநிலையில் தொடர்ந்தும் உள்ளதுடன் இராணுவம் அவற்றை ஒரு போதும் தடுத்ததில்லை என்பதோடு அவற்றுக்கு அது பங்களித்திருக்கலாம். தமிழ்ப் பிரதேசங்களில் செயலாற்றும் பெண்கள் உரிமைகள் குழுக்கள், ஒரு விரோதமான இராணுவப் பிரசன்னத்தின் காரணமாக குறிப்பாகத் துஷ்பிரயோகங்களை ஆவணப்படுத்துவது சிரமமானது என அறிவித்தனர்.

**முக்கியமான சர்வதேச செயற்பாட்டாளர்கள்**

மனித உரிமைகள் பேரவையின் மார்ச் மாத அமர்வில், தீவிரமான யுத்தக்காலத் துஷ்பிரயோகங்களுக்கான பொறுப்புக்கூறல் மீது கவனம் செலுத்தும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதிலிருந்து பேரவையைத் தடுப்பதற்கு அரசாங்கம் பயனற்றமுறையில் முயற்சித்தது. ஏனைய நாடுகளுடன் ஐக்கிய அமெரிக்கா மற்றும் இந்தியாவினால் ஆதரவளிக்கப்பட்ட தீர்மானம், தீர்மானத்தை அமுல்படுத்துவதற்கு அர்த்தமுள்ள நடவடிக்கைகளை இலங்கை எடுப்பதற்கு தவறினால், 2014 அமர்வில் ஒரு சுயாதீனமான புலன் விசாரணையைக் கோருவதற்கான மேடையை அது ஏற்படுத்தும்.

மனித உரிமைகள் தொடர்பான கரிசனைகள் காரணமாக கொழும்பில் நவெம்பர் மாதம் நடைபெற்ற பொதுநலவாய அரசாங்கத் தலைமைகளின் மாநாட்டில் (CHOGM) கனடா நாட்டின் பிரதம மந்திரி ஸ்டீபன் ஹார்ப்பர், அதே போன்று மொரிசியஸ் நாட்டுப் பிரதம மந்திரி ஆகியோர் கலந்து கொள்ளவில்லை. உள்நாட்டிலான கரிசனைகளை குறிப்பிட்டு, இந்தியாவின் பிரதம மந்திரியும் கூட மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை. இலங்கையில் மனித உரிமைகளின் நிலைமைகள் மற்றும் யுத்தக் கால கொடுமைகளுக்கான பொறுப்புக்கூறலின்மை என்பன ஊடகங்களின் செய்திகளுக்கான முக்கியத்துவம் கொண்டவையாக வந்தன. ஐக்கிய இராச்சியத்தின் பிரதம மந்திரி டேவிட் கமரூன் மாநாட்டில் கலந்து கொண்டார் என்பதோடு வடக்கில் யுத்தத்தினால் சிதைவடைந்த பகுதிகளைப் பார்வையிடுவதிலும் மற்றும் உள்ளூர் செயற்பாட்டாளர்களுடன் பேசுவதிலும் கூடுதல் நேரத்தைச் செலவிட்டார். ஐக்கிய அமெரிக்கா மற்றும் கனடா என்பவற்றால் ஆதரவளிக்கப்பட்ட ஒரு நிலைப்பாடாக அமைந்த, ஒரு சுயாதீன புலன்விசாரணையை இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளாவிட்டால், யுத்தக் குற்றங்களுக்காக ஒரு சர்வதேச புலன்விசாரணைக்கு ஐக்கிய இராச்சியம் ஆதரவளிக்கும் என அவர் வெளிப்படையாகவே கூறினார்.

சீனா, இலங்கையுடனான அதன் உயர்மட்ட ஈடுபாடு மற்றும் முதலீடுகளைப் பேணியதுடன் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்துக்கு எதிர்ப்பையும் தெரிவித்தது. அர்த்தமுள்ள மாகாணசபைத் தேர்தல்களை நடாத்துவதற்கு அழுத்தம் கொடுத்த பின்னர், மாகாணங்களுக்கு அதிகாரப் பகிர்வைக் கோருகின்ற, அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தின் முழுமையான அமுல்படுத்தலை இந்தியா தொடர்ந்து கோரி வருகின்றது.